1973 மார்ச் 26]

THIRU K. S. KOTHANDARAMAIAH : Sir, already there are buses plying between Nilgiri and Mysore and if they are extended upto Sivasamudram and also Bangalore, traffic will increase and Government also will get more income. May I know from the Minister whether that will be expedited ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : It is a fact that by extending the route from Mysore to Bangalore we are likely to get more income. Probably that is one of the reasons for the delay on the part of Mysore Government to agree to the proposal. Anyhow we are having direct talks so that there can be parity for both the States in this route.

திரு ரா. ரா. முனுசாமி : இப்படி பல வழித்தடங்களில் ஓடுகிற பேருந்துகளில் அவை மக்கள் இல்லாமல் ஓடிக்கொண்டிருக்கின்றன. எந்த எந்த இடங்களில் பயணிகளுக்கு அதிகமாகத் தேவைப்படுகிறதோ அந்த அந்த இடங்களில் அவற்றை மாற்றியமைக்க அரசு முன்வருமா ?

(விடை இல்லை.)

சென்னை-சேலம் பேருந்து வழித்தடம்.

* 490 வினா திரு ந. தருமலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னைக்கும் சேலத்திற்கும் இடையே திருக்கோயிலூர் வழியாக ஓடிக்கொண்டிருந்த அரசு விரைவுப் பேருந்து கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னதாக நிறுத்தப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதனை மீண்டும் இயக்கச் செய்ய எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) திண்டிவனம், விழுப்புரம், மடப்பட்டு, திருக்கோயிலூர், கள்ளக் குறிச்சி, ஆத்தூர் வழியாகச் செல்லும் சென்னை-சேலம் வழித்தடம், திருக்கோயிலூருக்குச் செல்லாமல், திண்டிவனம், விழுப்புரம், மடப்பட்டு, உளுந்தூர்பேட்டை, கள்ளக் குறிச்சி, சேலம், பவானி, பெருந்துறை, அவினாசி வழியாகச் செல்லும் சென்னை-கோயம்புத்தூர் வழித்தடமாக மாற்றப்பட்டுள்ளது.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. அ. ஆறுமுகம் : சென்னையில் இருந்து சேலம் செல்கிற பஸ்கள் இப்போது குறைவாக இருக்கின்றன. ஆகவே பிரயாணிகள் சென்று வருவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அதை சிறிது அதிகப்படுத்தவேண்டிய அளவிற்கு பஸ்களை விடுவதற்கு அரசு யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : அரசு யோசிக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : வழித்தடங்களை மாற்றும்போது ஒரு இடத்திற்கு ஒரு வசதியைக் கொடுத்துவிட்டு திடீரென்று அங்கிருந்து எடுப்பது நியாயமா ? திருக்கோயிலூர் வழி போய்க்கொண்டிருப்பதை வேறு வழியில் விடுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். **The interest of the Public will be affected.** ஆகவே, அவர்களுக்கு ஏதாவது ஒரு வாய்ப்பு கொடுத்துவிட்டு மாற்றுகிறீர்களா ? அல்லது இஷ்டப்படி மாற்றிக்கொள்கிறீர்களா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : நீண்ட தூரம் பயணம் செய்கிற பயணிகள் வேண்டுகோள்படிதான் இந்த வழித்தடம் நேராக மாற்றியமைக்கப்பட்டது. திருக்கோயிலூர்—சென்னைக்கு வருவதற்கு விரைவுப் பேருந்தைவிட சாதாரணப் பேருந்து ஒன்றை விடுவதற்கு அரசு பரிசீலனை செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒற்றிவைப்புத் தீர்மானம்.

எண்ணூர் அனல் மின்நிலையத்தில் ஒரு பிரிவு மூடப்பட்டதுகுறித்து

Mr. DEPUTY SPEAKER : Under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, the Hon. Member, Thiru N.K. Palanisamy has given notice of motion for adjournment of the business of the House to discuss a matter of urgent public importance, namely—

' to discuss about the serious situation arising out of the closure of a section of Ennore Thermal Plant and the curtailment of the electricity production consequently'.

இது எப்படி 42வது விதியின்கீழ் ஒத்தி வைப்புத் தீர்மானத்தின்கீழ் வரும் என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, எண்ணூரில் நிலக்கரிப் பற்றுக்குறை காரணமாக ஒரு செக்ஷன் மூடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இன்னும் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைக்குள் மேலும் நிலக்கரி வராவிட்டால் மேலும் மூடப்பட்டு விடும் அபாயம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதே மாதிரி நெய்வேலி தர்மல் ஸ்டேஷனிலும்